‘முற்போக்கு புத்தகக் காட்சி’ தமிழ் அறிவுச் சூழலுக்கே புதிய முயற்சி!

# அடுத்த தலைமுறைக்கும் அரசியல் புத்தகங்களைக் கொண்டு செல்வோம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, நவ.2-**

**கழக இளைஞர் அணி முன்னெடுக்கும் ‘முற்போக்கு புத்தகக் காட்சி’ எனும் முக்கியமான முயற்சி குறித்து வலைதளப் பதிவிட்டுள்ள துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், “அடுத்த தலைமுறைக்கும் அரசியல் புத்தகங்களைக் கொண்டு செல்வோம்! வாசிப்பை நேசித்து, முற்போக்கு அரசியலை முன்னெடுப்போம்!” என்று குறிப்பிட்டுள்ளார்.**



துணை முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

திராவிட இயக்கம் எப்போதுமே புத்தகங்களைப் படைப்பதிலும் படிப்பதிலும் முன்நிற்கும் இயக்கம்.

தந்தை பெரியார், தன் கருத்துகளைப் பரப்ப புத்தகங்களை ஓர் ஆயுதமாகக் கையாண்டார். கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை, அம்பேத்கரின் ‘சாதி ஒழிப்பு’, பகத்சிங்கின் ‘நான் ஏன் நாத்திகன் ஆனேன்?’ ஆகிய புத்தகங்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

பேரறிஞர் அண்ணாவும் முத்தமிழறிஞர் கலைஞர் உள்ளிட்ட அவரது தம்பிமார்களும் ஏராளமான புத்தகங்களை எழுதி திராவிட இயக்கக் கொள்கைகளைப் பரப்பினர்.

சென்னைப் புத்தகக்காட்சியை நடத்தும் ‘பபாசி’ அமைப்புக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கி ஆண்டுதோறும் சிறந்த புத்தகங்களுக்கு விருதுகள் வழங்க ஊக்குவித்தார், முத்தமிழறிஞர் கலைஞர்.




தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் புத்தக வாசிப்பை ஊக்குவிப்பதிலும் எழுத்தாளர்களைப் போற்றுவதிலும் தனிக்கவனம் செலுத்தி வருகிறார் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்!

சென்னையில் மட்டும் நடந்த புத்தகக்காட்சியை மாவட்டம்தோறும் நடத்துவது, இலக்கியத் திருவிழாக்கள், உயரிய விருது பெற்ற எழுத்தாளர்களுக்கு கனவு இல்லங்கள், முக்கியமான எழுத்தாளர்களின் நூல்களை நாட்டுடைமை ஆக்குவது என்று அவரது தொடர் முன்னெடுப்புகள் அனைவராலும் பாராட்டப்படுகின்றன.

இந்தப் பாரம்பரியத்தில் நம் தி.மு.க. இளைஞர் அணியும், ‘முத்தமிழறிஞர் பதிப்பகம்’, சட்டமன்றத் தொகுதிதோறும் கலைஞர் நூலகம் என்று வாசிப்பை ஊக்குவித்து வருவது அனைவரும் அறிந்ததே!

இந்தச் செயற்பாடுகளின் தொடர்ச்சியாகக் கழக இளைஞர் அணி முன்னெடுக்கும் முக்கியமான முயற்சி, ‘முற்போக்கு புத்தகக்காட்சி’.

பொதுவாக, எல்லாப் புத்தகக் காட்சிகளிலும் அரசியல் நூல்கள், ஆன்மிகப் புத்தகங்கள், பொழுதுபோக்குப் புத்தகங்கள், சமையல் குறிப்புகள், குழந்தை களுக்கான புத்தகங்கள் என எல்லாமும் இடம் பெற்றிருக்கும். ஆனால், அரசியல் புத்தகங்கள் மட்டுமே இடம்பெறும் ‘முற்போக்கு புத்தகக்காட்சி’ என்னும் கழக இளைஞர் அணியின் முன்னெடுப்பு, தமிழ் அறிவுச்சூழலுக்கே புதிய முயற்சி.

மார்க்சியம், பெரியாரியம், அம்பேத்கரியம், திராவிட இயக்கம், தமிழ்த்தேசியம், பெண்ணியம் போன்ற முற்போக்கு அரசியல் சார்ந்த புத்தகங்கள் மட்டுமே இடம் பெறும் இந்த ‘முற்போக்கு புத்தகக் காட்சி’யில் அரசியல் புத்தகங்கள் வெளியிடும் பதிப்பகங்களின் 50க்கும் மேற்பட்ட அரங்குகள் இடம் பெறவுள்ளன. மேலும், முற்போக்குச் சிந்தனையாளர்களின் உரைவீச்சு மற்றும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

அடுத்த தலைமுறைக்கும் அரசியல் புத்தகங்களைக் கொண்டு செல்வோம்!

வாசிப்பை நேசித்து, முற்போக்கு அரசியலை முன்னெடுப்போம்!

இவ்வாறு அப்பதிவில் துணை முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# முழு ஆற்றலுடன் - சென்னைக்கு மீண்டும் வருகிறது ‘ஃபோர்டு’ நிறுவனம்!

## வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!



**சென்னை, நவ. 2-**

**ஃபோர்டு நிறுவனத்தால் ரூ.3250 கோடி முதலீட்டில் 600 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் மறைமலை நகரில், அடுத்த தலைமுறை வாகன இன்ஜின் (NextGen Engine) உற்பத்தி செய்வதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது குறித்து**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-**

“ஃபோர்டு நிறுவனம் 3,250 கோடி ரூபாய் முதலீட்டில் அடுத்த தலைமுறை வாகன இஞ்சின் உற்பத்தி அலகைத் தனது மறைமலை நகர் தொழிற்சாலையில் அமைக்கவுள்ளது. மிக நீண்ட, நம்பிக்கை கொண்ட உறவினைப் புதுப்பிக்கும் வகையில் இந்த ஆற்றல்மிகு மீள்வருகை அமைந்துள்ளது. இந்த முக்கிய முதலீட்டினால் 600 நேரடி வேலைவாய்ப்புகள் உருவாவதோடு, தமிழ்நாட்டின் ஆட்டோ மொபைல் உதிரிபாகச் சூழலும் வலுவடையும்.

அடுத்த தலைமுறை இஞ்சின்களை உற்பத்தி செய்ய இந்தியாவின் ஆட்டோ மொபைல் தலைநகரத்தைத் தேர்வு செய்துள்ள ஃபோர்டின் முடிவானது, தமிழ்நாட்டின் தொழில் துறை வலிமைக்கும் உலக உற்பத்திச் சங்கிலியில் நமது தவிர்க்க முடியாத இடத்துக்கும் மற்றுமொரு சான்றாக உள்ளது!”

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2025 அக்டோபர் 21 முதல் 26 வரை சீனாவில் நடைபெற்ற பேட்மிண்டன் ஆசிய ஜூனியர் சாம்பியன்ஷிப் 2025 போட்டியில், ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் முதல் தங்கப் பதக்கத்தை வென்று வரலாற்று சாதனை படைத்துள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சாம்பியன்ஸ் மேம்பாட்டுத் திட்ட (CDS) திருவள்ளூர் மாவட்ட வீராங்கனை செல்வி.எஸ்.ஆர். தீக்ஷா அவர்களுக்கு நேற்று முன்தினம் (31.10.2025) வாழ்த்துத் தெரிவித்து, 5,00,000 ரூபாய்க்கான ஊக்கத்தொகை காசோலையை வழங்கினார். இந்நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, பயிற்சியாளர், பெற்றோர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

தமிழ்நாட்டின் சாதனைகளைப் பின்பற்றும் பீகார் தேசிய ஜனநாயகக் கூட்டணி தேர்தல் அறிக்கை!

# மோடியின் தமிழர் விரோதப் பேச்சு, பொய் என்பதை - என்.டி.ஏ. வெளியிட்ட தேர்தல் அறிக்கையே அம்பலப்படுத்திவிட்டது!

## நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் அறிக்கை!

சென்னை, நவ.2–

தயாநிதி மாறன் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–



பீகார் சட்டமன்றத் தேர்தலுக்காக பா.ஜ.க., ஐக்கிய ஜனதா தளம் கட்சிகள் அடங்கிய தேசிய ஜனநாயகக் கூட்டணி தேர்தல் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. தி.மு.க. தலைமையிலான திராவிட மாடல் அரசு தமிழ்நாட்டில் நிறைவேற்றி வரும் முக்கிய திட்டங்களைத் தேர்தல் வாக்குறுதிகளை அளித்திருக்கிறார்கள்.

பள்ளிகளில் சத்தான காலை உணவு, பெண் தொழில்முனைவோர், 50 லட்சம் புதிய வீடுகள், 125 யூனிட் இலவச மின்சாரம் எனத் தமிழ்நாட்டின் சமூக நலத் திட்டங்கள் தேர்தல் அறிக்கை மூலம் வழிமொழிந்திருக்கிறது தேசிய ஜனநாயகக் கூட்டணி.

மாணவர்களின் வருகையை அதிகரிக்கவும், அவர்களின் கற்றல் ஆர்வத்தை மேம்படுத்தவும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்குக் காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டதை 2022–ல் தி.மு.க. அரசு கொண்டு வந்தது. அந்தத் திட்டத்தை இப்போது பீகாரில் கொண்டு வரப் போவதாக பா.ஜ.க. கூட்டணி அறிவித்திருக்கிறது.

நிதி, சந்தை வாய்ப்புகள், தொழில்நுட்பம் மற்றும் பயிற்சிகள் போன்றவற்றை வழங்கி மகளிரைத் தொழில் முனைவோராக உருவாக்குவதற்காக TN RISE என்ற திட்டத்தைத் திராவிட மாடல் அறிமுகப்படுத்தியிருக்கிறது. இதனை மையப்படுத்தித் தான் ‘மிஷன் கரோர்பதி மூலம் பெண்கள் தொழில்முனைவோராக மாற்றப்படுவார்கள்’ என பீகார் தேர்தலுக்காக வாக்குறுதி அளித்திருக்கிறது பா.ஜ.க. கூட்டணி.

மாணவிகளின் உயர் கல்வி கனவை உறுதி செய்து அவர்களின் முன்னேற்றத்திற்குத் தடம் அமைத்துத் தரும் வகையில் அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் பள்ளியில் பயின்று உயர்கல்வி சேரும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கப்பட்டு வரும் திராவிட மாடல் அரசின் புதுமைப்பெண் திட்டத்தை பின்பற்றி, ’உயர்கல்வி பயிலும் அனைத்துப் பிற்படுத்தப்பட்ட வகுப்புக் குழந்தைகளுக்கும் மாதம் ரூ. 2,000 உதவித் தொகை’ வாக்குறுதியைக் கொடுத்திருக்கிறது பா.ஜ.க. தேர்தல் அறிக்கை.

தமிழ்நாட்டில் வீட்டு மின் இணைப்புகளுக்கு 100 யூனிட் இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. பீகார் மாநிலத்தில் வீட்டு உபயோக நுகர்வோருக்காக மாதம் 125 யூனிட் இலவச மின்சாரம் வழங்கப்படும் என்று பீகார் தேர்தலுக்கு முன்பே அறிவித்து விட்டார்கள்.

நாட்டிலேயே முதன்முறையாக ஊரகப் பகுதிகளில் ஏழைக் குடும்பங்கள் வசிக்கும் குடிசைகளுக்கு மாற்றாக நிரந்தர வீடுகள் கட்டித்தரும் முன்னோடித் திட்டம் முத்தமிழறிஞர் கலைஞரால் 1975 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 2010– ஆம் ஆண்டு குடிசையில்லா மாநிலம் என்ற இலக்கை எய்திடும் வகையில் ‘கலைஞர் வீடு வழங்கும் திட்டம்’ அறிமுகப்படுத்தப் பட்டது. ‘குடிசையில்லா தமிழ்நாடு’ என்ற இலக்கை அடையும் வகையில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்தார். கடந்த 29–ம் தேதிதான் தென்காசியில் நடைபெற்ற அரசு விழாவில், ’கலைஞரின் கனவு இல்லம்’ திட்டத்தின் ஒரு லட்சமாவது பயனாளிக்கு வீட்டிற்கான சாவியை முதலமைச்சர் வழங்கினார். நிலையான கான்கிரீட் மேற்கூரையுடன் கூடிய சொந்த வீடு கட்ட வேண்டும் என்ற கனவுடன் வாழும் ஊரக ஏழைக் குடும்பங்களின் கனவினை நிறைவேற்றும் ’கலைஞரின் கனவு இல்லம்’ திட்டத்தை மையமாக வைத்துத்தான் 50 லட்சம் புதிய கான்கிரிட் வீடுகள் கட்டித் தரப்படும் என பீகாரில் பா.ஜ.க. கூட்டணி வாக்குறுதி கொடுத்திருக்கிறது.

பீகார் சட்டமன்றத் தேர்தல் பிரசாரத்தில் நேற்று பேசிய பிரதமர் மோடி, “தமிழ்நாட்டில் பீகார் தொழிலாளர்களைத் தி.மு.க.வினர் துன்புறுத்தி வருகிறார்கள்” எனக் குற்றம்சாட்டியிருந்தார். இன்று தேசிய ஜனநாயகக் கூட்டணி வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் தி.மு.க. அரசின் திட்டங்களை வாக்குறுதிகளாகக் கொடுத்து தமிழ்நாட்டை அங்கீகரித்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டிற்கு பீகார் தொழிலாளர்கள் வேலைக்கு வருவதற்குக் காரணம் தமிழ்நாட்டில் இருக்கும் கட்டமைப்புகளும் வேலைவாய்ப்புகளும்தான். அதனைத் தமிழ்நாடு பல ஆண்டுகாலமாக உருவாக்கி வைத்திருக்கிறது. புலம்பெயர் பீகார் தொழிலாளர்கள் தமிழ்நாட்டின் தொலைக்காட்சிகளிலும் விவாத நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றுப் பேசியபோது, “தமிழ்நாட்டில் இருக்கும் மருத்துவம், ரேஷன், கல்வி போன்ற அடிப்படை வசதிகள் எங்கள் ஊரில் இல்லை. மிகச் செலவு பிடிக்கும் சிக்கலான மருத்துவத்திற்குக் கூட பணம் இல்லாமல் எங்கள் பிள்ளைகள் தமிழ்நாட்டில் சிகிச்சை பெற்றார்கள்’’ எனப் பெருமை பொங்கச் சொன்னார்கள்.

சென்னை பல்லாவரத்தில் வேலை செய்து வரும் பீகாரை சேர்ந்த தனஞ்சே திவாரி, ரீனா தேவி தம்பதியின் மகள் ஜியா குமாரி, கவுல் பஜார் அரசுப் பள்ளியில் கடந்த மே மாதம் பத்தாம் வகுப்பில் 467 மதிப்பெண்கள் பெற்று முதல் மாணவியாகத் தேறினார். தமிழ்ப் பாடத்தில் 93 மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்தார். தமிழ்நாட்டில் அரசுப் பள்ளியில் பயின்று பீகார் மாணவி சாதனை படைப்பதற்குத் தமிழ்நாட்டில் கல்வி விலையில்லாமல் கிடைப்பதுதான். இவையெல்லாம் பீகார் மக்கள் தமிழ்நாட்டுக்கு அளித்த நற்சான்றிதழ்கள்.

பீகார் மக்கள் தமிழ்நாட்டுக்கு வேலை தேடி இடம்பெயர்வது ஏன்? எனச் சொல்ல முடியுமா? பீகாரில் கட்டமைப்புகள் உருவாக்கப்படாததால் தானே பீகார் மக்கள் தமிழ்நாட்டுக்கு வருகிறார்கள். இப்போது தமிழ்நாட்டின் சமூக நலத் திட்டங்களை பா.ஜ.க. கூட்டணி தேர்தல் அறிக்கையில் சொல்கிறார்கள். ஏன் இந்த முரண்பாடு?

ஒடிசாவில் சட்டசபைத் தேர்தலில், தமிழர்கள் திருடர்கள் என்றும் ’தமிழர்கள் ஒடிசாவை ஆள நினைப்பதா?’ என்றும் பிரதமர் மோடியும் உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் சொன்னார்கள். இப்போது பீகார் சட்டமன்றத் தேர்தலில் ‘பீகார் தொழிலாளர்களைத் தமிழர்கள் துன்புறுத்துகிறார்’ எனச் சொல்கிறார்கள். இப்படித் தமிழர்களை அவமதித்து அங்கே ஆட்சியில் அமர துடிக்கிறார்கள்.

இது பிரதமருக்கு அழகல்ல. 20 ஆண்டுகள் ஆட்சி செய்தும் பீகாரில் வெற்றி பெறுதற்குச் சாதனைகள் இல்லையா?. அதனைச் சொல்லி வாக்கு பெற முடியாது என்பதால் தமிழர்களைக் கொச்சைப்படுத்துகிறார்கள்.

வெளிப்படையாகச் சொல்வது என்றால், மோடியின் தமிழர் விரோதப் பேச்சு, பொய் என்பதை அவர்கள் கூட்டணி வெளியிட்ட தேர்தல் அறிக்கை மூலம் அம்பலப்படுத்திவிட்டது.

இவ்வாறு தயாநிதி மாறன் எம்.பி. தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச் சாவடி

# திருச்சி மத்திய - வடக்கு மாவட்டக் கழக சார்பில் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் கே.என்.நேரு முன்னிலையில் நடைபெற்றது!

*திருச்சி, நவ.2-*

*திருச்சி மத்திய, வடக்கு மாவட்டக் கழக சார்பில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி ஆலோசனைக் கூட்டம் திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு முன்னிலையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மாவட்ட, மாநகர நிர்வாகிகள் பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மாநகர நகர, பேரூர் வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். இந்த ஆலோசனை கூட்டத்தில் 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.*

*இந்த கூட்டத்தில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்தர பாண்டியன், ஸ்டாலின் குமார், பழனியாண்டி, கதிரவன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பெரியசாமி, மாவட்ட துணைச் செயலாளர் முத்து செல்வம் விஜய் ஜெயராஜ், காஜா மலை விஜய் பொருளாளர் துரைராஜ் , செவந்தி லிங்கம் உட்படகழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்*

*கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத்துறைஅமைச்சர் கே என் நேரு பேசும் போது, திமுக தலைவர் முதலமைச்சர் அவர்கள் கடந்த 28ஆம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் பல்வேறு ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.*

*சட்டமன்ற உறுப்பினர்களுக்கான பணி ஒன்றிய செயலாளர்களுக்கான பணி என்ன என்பதை அச்சிட்டு வழங்க உள்ளனர் கிராமங்களில் 2002 வாக்காளர் பட்டியலையும், நகரங்களில் 2005 வாக்காளர் பட்டியலையும் நாம் கையில் வைத்துக் கொண்டு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் நீக்கல் போன்ற பணிகளை பார்க்க வேண்டும்.*

*வடமாநிலத்தைச் சேர்ந்த நிறைய பேர் இங்கு வேலைக்கு வருகிறார்கள்.*

*மாநிலத்தவர்கள் மூன்று மாதங்களில் ஒரே இடத்தில் தங்கியிருந்தால் வாக்காளர் பட்டியலில் பெயர்கள் சேர்க்க முடியும். அதற்கான முயற்சியில் அவர்கள் ஈடுபடுவார்கள்.*

*ஆனால் அவர்கள் இடம் மாறிக் கொண்டே இருப்பார்கள் ஆகவே அவர்களை பட்டியலில் சேர்க்கக் கூடாது என அப்ஜெக்ஷன் கொடுக்க வேண்டும்.*

*இஸ்லாமியர்கள் ஓட்டை தவிர்க்க பார்ப்பார்கள்.*

*அதில் ஒரு ஓட்டு கூட விட்டு விடாமல் பார்க்க வேண்டும் அது நம்முடைய கடமை.*

*நமக்கு யார் யாரெல்லாம் வாக்களிக்கிறார்களோ அவர்களை எல்லாம் தவிர்ப்பதற்கு தேர்தல் அலுவலர்கள் திட்டமிட்டால் தடுக்க வேண்டியது நமது கடமை.*

*100, 200 வாக்காளர்களை மொத்தமாக சேர்த்தால் அதை நாம் தவிர்க்க வேண்டும்.*

*பெண்களுடைய வாக்குகள் ஒன்று கூட தவறாமல் இடம்பெற செய்ய வேண்டும்.*

*கடந்த சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற தொகுதிகள் குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.*

*திமுக கூட்டணியில் இருக்கும் கட்சிகள் நம்முடன் வருவார்கள் என பழனிச்சாமி பேசிக்கொண்டே இருந்தார்.*

*ஆனால் எந்த கட்சியும் இங்கிருந்து செல்லவில்லை. ஆகவே திமுக கூட்டணி கூட்டணி வலுவாக இருக்கிறது. அதிமுக கூட்டணியில் இடம் பெற்றிருந்த பா.ம.க. இரண்டாக பிளந்து உள்ளது. தேமுதிக நிலைப்பாடு தெளிவாகவில்லை.அதிமுக பாஜகவுடன் கூட்டணி அமைத்திருந்தாலும் அது பொருந்தாத கூட்டணியாக உள்ளது. இது நமக்கு மிகப் பெரிய சாதகம் அதை மேலும் சாதகமாக மாற்ற பார்க்க வேண்டும்.*

*தேர்தல் அலுவலர்களுக்கு ஒரு நாளைக்கு 50 புதிய வாக்காளர்கள மட்டுமே சேர்க்க அனுமதி உள்ளது அதையும் மீறி புதிதாக ஆள் சேர்த்தால் ஆட்சேபிக்க வேண்டும் பெண்களின் ஓட்டு நமக்கு மிகவும் முக்கியம் டெல்டா மாவட்டங்களில் உள்ள 41 தொகுதிகளிலும் தி.மு.க. வெற்றி பெற கடுமையாக உழைக்க வேண்டும் என்று கூறினார்*

*மேலும் செய்தியாளர்களிடம் பேசும்போது அமலாக்கத்துறை சோதனை எங்களுக்குச் சொந்தமான இடத்தில்நடத்திய சோதனை பொழுது சில ஆவணங்கள் கிடைத்ததாகவும் அது குறித்து ஆய்வு செய்யுமாறு அமலாக்கத்துறை தமிழக போலீசாருக்கு தெரிவித்தனர். அதன் அடிப்படையில் தமிழக போலீசார் அந்த ஆவணங்களை ஆய்வு செய்வார்கள்.*

*முறைகேடு நடந்ததா என்பதை போலீசார் விசாரிப்பார்கள். ஆனால் நான் எந்தவித தவறும் செய்ய வில்லை.*

*திமுகவை மிரட்டி பார்ப்பதற்காக கூட இதுபோன்று அவர்கள் செய்யலாம்.*

*திமுகவில் மூத்த தலைவர்களை ஓரங்கட்டும் வேலையை யாரும் செய்ய வில்லை.*

*தேர்தல் நேரத்தில் எங்களை விமர்சிக்க எதிர்க்கட்சிக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. விசாரணையில் நாங்கள் குற்றம் அற்றவர்கள் என்பதை நிரூபிப்போம். எப்பொழுதும் எந்த காரணத்தைக் கொண்டும் என்னால் இந்த இயக்கத்திற்கோ தலைமைக்கோ ஒரு சிறு அவை பெயர் கூட வராது என்பதை உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன்*

*அதிமுக கூட்டணியில் இருந்து தான் ஒவ்வொருவராக வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.*

*ஓபிஎஸ், தினகரன் உள்ளிட்டோரை திமுகவின் பிடீம் எனக் கூறும் எடப்பாடி பழனிச்சாமி அவர் வாயில் வந்ததை பேசிக்கொண்டு உள்ளார்.*

*எஸ் ஐ ஆர் நேர்மையாக நடந்தால் சரியாக இருக்கும் ஆனால் வேண்டுமென்றே பல வாக்காளர்களை கொத்துக்கொத்தாக வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதையும் நீக்குவதையும் தான் எதிர்க்கிறோம் என்றார்.*